**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண்.18/2013**
**நாள் : 09/03/2022, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 2-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ஏழுமலை | த/பெயர் - கண்ணன் |
| வயது - 54 | தொழில் - |
| விலாசம் - மேல்முதலம்பேடு கிராமம், கும்மிடிப்பூண்டி. | |

**குறுக்கு விசாரணை (DW2)**

நான் ஏழுமலை என்பதை காண்பிக்க அடையாளம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய விலாசத்தை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கு விவரங்கள் நன்றாக தெரியும். ரவியின் சகோதரி புனிதா சொத்தில் பாகப்பிரிவினை மற்றும் சீர்வரிசை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வேறு என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நிருபணவாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். நிருபணவாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயாரித்து கொடுத்தார். என்னுடைய வழக்கிறஞர் பெயர் என்ன என்றால் மஹாராஜன். இதிலுள்ள விவரங்கள் எல்லாம் யார் தயார் செய்தது என்றால் நான் விவரங்கள் சொன்னேன். வழக்கறிஞர் தயார் செய்தார். ரவியின் குடும்பத்தை

எனக்கு நன்றாக தெரியும். புனிதாவிற்கு யாருடன் எந்த தேதியில் எந்த இடத்தில் திருமணம் நடந்தது என்றால் 30 வருடத்திற்கு முன்பு பூவலம்பேட்டில் திருமணம் செய்துக் கொடுத்தார்கள். எந்த தேதி என்றும் யாருக்கு திருமணம் செய்துக் கொடுத்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது. ரவியின் குடும்பத்தில் யாருக்கு என்ன சொத்து கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கிலுள்ள 1வது அயிட்ட சொத்து ரவியின் தகப்பனார் அருணாச்சல முதலியார் தனது சொந்த உழைப்பால் வாங்கிய சொத்து. அவர் எந்த தேதியில், எந்த வருடம் வாங்கினார் என்பது தெரியாது. அவர் வாங்கிய கிரையப் பத்திரத்தை நான் பார்த்தது இல்லை. வாங்கியது என்று சொல்வார்கள். நான் விவசாயி என்பதால் எல்லார் வீட்டிற்கும் வேலை செய்ய போகும்போது அப்போது அந்த ஊரில் உள்ளவர்கள் அருணாச்சலம் சொத்தை வாங்கினார் என்று சொல்லுவார்கள். அருணாச்சல முதலியார் 2010, 2011ல் இறந்துவிட்டார். அருணாச்சல முதலியார் அவருடைய சொத்தை பிள்ளைகளுக்கு செட்டில்மென்ட் இறப்பதற்கு முன்பு எழுதிவிட்டார். அவர் எந்த தேதியில் எழுதினார் என்பது தெரியாது. அருணாச்சல முதலியார் இறப்பதற்கு முன்பு படுத்த படுக்கையாக இருந்த விரவம் தெரியுமா என்றால் தெரியாது. மீண்டும் சாட்சி தானாக முன்வந்து படுத்த படுக்கையாக இல்லை, நடந்து விவசாயம் பார்த்துக்கொண்டிருந்தார் என்று கூறுகிறார். இதர வழக்கு சொத்துக்கள் ரோஜம்மாளுக்கும், அவருடைய தந்தையாருக்கும் சொந்தமானது. அவர்கள் ரவி மற்றும் சேகருக்கும் உயில் எழுதி

வைத்தார்கள். எப்போது எழுதி வைத்தார்கள் என்பது தெரியாது. இந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அந்த ஊருக்கு விவசாய வேலைக்கு போகும்போது சொன்னார்கள். அருணாச்சல முதலியார் நிலத்தில் விவசாய வேலைக்கு சென்றுள்ளேன் என்றால் ஆமாம். அவர் காலத்திற்கு பிறகு அவருடைய பிள்ளைகளிடமும் விவசாய வேலைக்கு சென்றுள்ளேன் என்றால் ஆமாம். எனது மனைவி மேல்முதலம்பேடு கிராம ஊராட்சி மன்ற தலைவராக இருக்கிறார். எனக்கு வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் விவசாய நிலம் கிடையாது. வீடு மட்டும் உள்ளது. எனக்கு வழக்கு சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், ரவி என்பவர் சொன்னதை அவருக்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அருணாச்சல முதலியாருக்கு பூர்வீக சொத்து இருக்கிறதா என்றால் அருணாச்சல முதலியாரின் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்பதால் முதல் மனைவியின் வாரிசுகளிடம் சொத்து இருக்கிறது. ரவி வகையறாவிடம் இல்லை. ஆரம்பத்திலிருந்தே அருணாச்சல முதலியாருக்கு பூர்வீக சொத்து கிடையாது என்றால் ஆமாம். அருணாச்சல முதலியாருக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். அவர் படிக்கவில்லை. விவசாயம் தான். வழக்கு சொத்தை அருணாச்சல முதலியார் எப்படி கிரையம் வாங்கினார் என்றால் அவர் குத்தகைக்கு விவசாயம் செய்ததில் இருந்து கிடைத்த வருமானத்தில் வாங்கினார். அவர் யார் யாரிடம் குத்தகைக்கு நிலத்தில் பயிர் செய்தார் என்றால் தெரியாது.

எனக்கு அது யார் சொன்னது என்றால் சில விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். மற்றவை மற்றவர்கள் சொல்லியதன் மூலம் தெரியும். வாதி மற்றும் 2, 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடத்தில் பேச்சுவார்த்தை இருக்கிறதா என்றால் புனிதாவின் திருமணத்திற்கு முன் ஒற்றுமையாக இருந்தார்கள். குழந்தை பிறந்த பிறகு அதற்கான சீர்வரிசைகள் எல்லாம் கொடுத்தார்கள். புனிதாவிற்கும் ரவி குடும்பத்திற்கும் எப்போதிலிருந்து பேச்சுவார்த்தை இல்லை என்றால் எனக்கு தெரிந்த வரை இன்றையிலிருந்து 5 வருடத்திற்கு முன்பு வரை பேச்சுவார்த்தை இருந்தது. அதன் பிறகு இல்லை. கடந்த 5 வருடமாக பேச்சுவார்த்தை இல்லை. எனக்கு அவர்கள் குடும்பத்தை பற்றி தெரியாது என்றாலும், அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது என்றாலும், வழக்கு சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். அருணாச்சல முதலியாருடன் பிறந்தவர்கள் யார் என்றால் அவர் மட்டும் தான் அவருடைய தகப்பனாருக்கு ஒரே மகன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**